RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijot2341

Asian Research Association

INDIAN JOURNAL OF TAMIL

# மானிடவியல் நோக்கில் சங்ககால மணமுறை

மு. புவனேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர் -641006, தமிழ்நாடு, இந்தியா.

# Sangam Era Marriage in Anthropological Perspective

M. Bhuvaneswari [a, *]

[a] Department of Tamil, Sri Ramakrishna College of Arts and Science, Coimbatore-641006, Tamil Nadu, India
*Corresponding author Email: bhuvimusic.ar@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijot2341
Received: 29-08-2023; Revised: 17-10-2023; Accepted: 22-10-2023; Published: 04-11-2023

**Abstract:** Tolkappiyam divides the life of Sangam people in a grammatical way and establishes that this (something) as the material necessary for life. However, the opinions of the commentators explaining this idea are not the same, and it can be seen that there has been a change in thinking according to the change of time. Therefore, only explanations given by grammar and literature cannot provide sufficient information while studying the life of human beings in society. It can be known by understanding the people of the Sangam period that the Sangha people lived the life of an ethnic group. However, they do not follow the ritual system of marriage. It was only after the arrival of the Aryans that the system of marriage came into existence. They divided it into eight numbers. Ilampuranar suggests that among them Gandharva marriage is for Tamil people. Answers and proofs for this are available in Sangam literary hymns when studying the evolution of man through anthropology. It can be seen from the outside that certain rituals were followed in the wars. Therefore, Sangam people who shaped their lifestyles based on internal life rather than war, were either married, robbed or chastised. Based on this, this article presents the rituals of the Sangam period from an anthropological perspective.

**Keywords:** Sangam people, Tolkappiyam, Sangam Era Marriage, Marriage Style

## முன்னுரை

சங்க காலச் சமூக மக்கள் இனக்குழு வாழ்க்கை முறையை வாழ்ந்தனர். நில அடிப்படையில் மக்கள் ஐந்திணைப் பின்னணியை தமது வாழ்வியல் அமைப்புமுறையாகக் காத்து வந்தனர். இனக்குழுக்களின் தலைவர்களே அரசர்களாக இருந்தனர். அவர்களை நாம் சிற்றரசர்கள் என்றழைப்பதுண்டு. இருக்க, போர்க்களமான வாழ்க்கையை இவர்கள் வாழவில்லை என்பதனை சங்க இலக்கியப்பாடல்களில் இருக்கும் அமைதியே வெளிப்படுத்தி நிற்கிறது. ஆக, அடிப்படையில் நம்மைக் காட்டிலும் இன்பமான வாழ்க்கையை வாழ்ந்த சங்க மாந்தர்க்கு புறவாழ்வு ஒரு கூறு எனினும், அகவாழ்க்கையே இம்மக்களின் பண்பாட்டினைப் புலப்படுத்தி நிற்கிறது. அவ்வடிப்படையில் நோக்கின், சங்க மக்களின் காதல், கற்பு வாழ்வில் திருமணம் எனும் சடங்கு முறை இல்லை; கந்தர்வர்களுக்கே உரித்தான கந்தருவ மணமே அவர்களால் பின்பற்றப்பட்டது என்ற வழக்கினை தொல்காப்பியத்தின்வழி அறியமுடிகிறது. இலக்கணங்கள் இலக்கியத்தின் பொதுமைநோக்கி சில விளக்கங்கள் தரினும், ஆராய்ச்சியை விரிவுபடுத்துவதில் இலக்கியங்களின் பங்கே அதிகம். அவ்வகையில், அகநானூற்றில் திருமண விழவுக்காட்சிகளை சில பாடல்களில் காணமுடிகிறது. அதனை ஆராயும் பொருட்டே இக்கட்டுரையானது அமைக்கப்பட்டுள்ளது.

## கருதுகோள்

இன்றைய சூழலில் ஒவ்வொரு இனத்திலும் திருமணத்திற்கு முன்னர் மற்றும் பின்னர் பல்வேறு திருமணச் சடங்குகள் இருக்கின்றன. எந்த வழிமுறைகளும் தீடீரெனத் தோன்றிவிடாது. இக்கருத்தின் அடிப்படையில் சங்க கால மக்கள் கந்தர்வ மணமுறையை மேற்கொண்டாலும், அவர்களுக்குள்ளும்

திருமணச் சடங்குகள் இருந்திருக்க வேண்டும் என்ற கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

## சிலம்பு கழித்தல்

திருமணம் எனும் நிகழ்வு இன்றைய சூழலில் ஒரு சடங்காகப் பார்க்கப்படுகிறது. சடங்கு முறைகள் பெரிதும் இல்லாத சங்ககாலத்தில், மனம் ஒத்த தலைவன் தலைவியாகிய இருவரது நட்பானது, காதல் என்ற நிலையிலிருந்து குறுகிய காலத்தில் கற்புநிலையை அடைதலே இல்வாழ்க்கை எனக் கொள்ளப்படுகிறது. மாறாக, திருமணம் எனும் நிகழ்ச்சிகளோ, தாலி கட்டுதலோ, மெட்டி போடும் வழக்கமோ இல்லை. சிலம்பு கழித்தல் எனும் வழக்கமே அக்காலத்தில் இருந்ததாக பாடல்கள் உணர்த்துகின்றன. உதாரணமாக,

"நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்,

எம்மனை வதுவை நன்மணங் கழிக" (Somasundaranar, 2009)

எனத் தலைவனோடு உடன்போகி மீண்டத் தலைவிக்கு நற்றாய் தன் வீட்டில் சிலம்பினை அகற்றுகிறாள் என செவிலி பிறருக்கு உரைப்பதாய் பாடல் அமைகிறது. திருமணத்திற்கு முன்னர் பெண் காலில் சிலம்பு அணிந்திருப்பாள் அவள் தலைவன் இல்லம் புகுவதற்கு முன்னரோ அல்லது திருமண நாளில் தலைவனது வீட்டிலோ சிலம்பு கழித்தல் எனும் நிகழ்வு நடத்தப்படுகிறது. களவிலும் கற்பிலும் இரு வேறு சிலம்புகளை பெண்கள் அணிந்ததுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. இதனை காப்பிய காலத் தலைவியான கண்ணகியிடம் இருந்து புரிந்து கொள்ளலாம். இன்றும் கூட பருவமெய்திய பெண்கள் மெட்டிக்கு பதிலாக மெட்டி போன்று தடை என இரும்பாலான அணிகலனை தம் காலில் அணிந்திருப்பதைக் காணமுடிகிறது. சடங்குகளும் அவை சார்ந்த நம்பிக்கைகளும் மனிதன் தோன்றிய காலத்திலிருந்து இருக்கத்தான் செய்கின்றது. ஏனெனில், எதன்மீது பயம் தோன்றுகிறதோ அதனை வழிபடவும் தொடங்கினான் மனிதன். வழிபாடே நம்பிக்கைக்கும் சடங்குமுறைகளுக்கும் காரணமாய் அமைந்தன. அவ்வாறு இருக்கையில் வாழ்வின் அடிப்படையாகிய திருமணத்தினை சங்கமாந்தர் எந்தவித சடங்குமின்றி செய்தனர் என்பது ஆராய்ச்சிக்குரியதே. ஆக, சடங்குமுறைகள் இருந்தன. அவை இன்றுபோல் பிரம்மாண்டங்களை தன்னகத்தே கொண்டிருக்கவில்லை என்பதே சாலப்பொருந்தும். இதற்கு உதாரணமாய் அமைகிறது அகநானூறு.

"களவுமணம் - கற்புமணம்

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு

அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்

காமக் கூட்டங் காணுங் காலை

மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்

துறையைமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே" (Ilampooranar, 2010)

எனும் களவியலின் முதல் நூற்பா களவு இன்னதென உரைத்திற்று. இந்நூற்பா எண்வகை மணமுறைகளை அறிமுகப்படுத்துகிறது. அவற்றுள் கந்தருவமணமுறை தமிழர்களுக்கே உரித்தானதென உரையாசிரியர்களே விளக்கமளிக்கின்றனர். களவியலில், தாமே எதிர்படுதலாகிய காமக்கூட்டம் குறித்து பேசாமல் மன்றல் குறித்து விளக்கமளிக்கக் காரணம் என்னை என்று தெரியவில்லை. கற்பியலில்,

## கற்பெனப் படுவது கரணமொடு புணரக்

"கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்

கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே" (Ilampooranar, 2010)

"கற்பென்று சொல்லப்படுவது, கரணத்தொடு பொருந்திக் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழவன் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழத்தியைக் கொடுத்தற்குரிய மரபினையுடையார் கொடுப்பக் கொள்வது என்றவாறு" என இதற்கு விளக்கம் அளிக்கும் இளம்பூரணார் வதுவைச் சடங்கு இன்னதென குறிப்பிடுகிறார். இவ்விரு நூற்பாக்களையும் ஒப்பிடுகையில் களவிற்கு பின் கற்பு என எடுத்துக்கொள்வதா? அல்லது களவுமணம் வேறு அல்லது கற்புமணம் வேறு என குறிப்பிடுவதா? என்று எண்ணத்தோன்றுகிறது.

களவு மணமென்பது தாமே எதிர்பட்டு காமக் கூட்டத்தினால் ஒன்றுபட்ட தலைவனும் தலைவியும் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் எய்துதல் அல்லது உடன்போக்கின் வழி இணைந்த தலைவன் தலைவியரது வாழ்க்கையாக அமைகிறது. பெரும்பான்மையான சங்கப்பாக்கள் அனைத்தும் களவு பற்றியே பேசுகிறது. கற்பில் தலைவனும் தலைவியும் சேர்ந்து வாழும் நல்வாழ்க்கை குறித்தும்;

10.54392/ijot2341

போர்க்கால பிரிவு மற்றும் ஊடல் குறித்தும் பேசப்படுகிறது. ஆக, தொல்காப்பியர் கற்பியல் நூற்பாவிற் குறிப்பிட்டது போல் மகள் வேண்டி வரும் தலைமகனுக்கு தலைவியை கொடுக்கத் திருமணம் நடைபெறுகையில் இங்கு வதுவைச் சடங்குகள் மேற்கொண்டிருக்க வாய்ப்புகள் அதிகம். இலக்கியங்களும் இதனையே பதிவு செய்கின்றன. இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டே பின்வரும் பாடல்கள் ஆராயப்பட்டுள்ளன.

## களவும் புளித்தன, விளவும் பழுநின

அகநானூற்றில் களவும் புளித்தன விளவும் பழுநின எனத் தொடங்கும் முல்லைத்திணை பாடலொன்றில், திருமணத்தின் போது நடைபெறும் சில நிகழ்வுகளைக் கூறி விரைவில் வரைவு கடாவுமாறு தலைவனை வற்புறுத்துகிறாள் தோழி. அப்பாடலானது,

"சிறுதலைத் துருவின் பழுப்புறு விளைதயிர்

இதைப்புன வரகின் அவைப்புமாண் அரிசியொடு

கார்வாய்த் தொழிந்த ஈர்வாய்ப் புற்றத்து

ஈயல்பெய் தட்ட இன்புளி வெஞ்சோறு

சேதான் வெண்ணெய் வெம்புறத் துருக

இளையர் அருந்தப் பின்றை நீயும்

புனையிருங் கதுப்பினின் மனையோ ளயரப்

பாலுடை அடிசில் தொடீஇய ஒருநாள்" (Somasundaranar, 2007)

சங்க காலத்தில் திருமணத்திற்குப் பின் தலைவி கணவன் உள்ளிட்ட அனைவருக்கும் விருந்தளிக்கும் பண்பாடு இருந்துள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகிறது. ஆட்டினது பாலால் தயாரிக்கப்பட்ட தயிரினை உலை ஏற்றி வரகினால் ஆக்கப்பட்ட சோற்றோடு, புற்றீசல் பெய்த புளிப்புமிக்க வெஞ்சோற்றில் வெண்ணெய் ஊற்றி, நின்னோடு உடனான இளைஞர் சேர்ந்துண்ண நின் மனையாளாகிய தலைவி நினக்கு விருந்தளிப்பாள் என தோழி குறிப்பிடுகிறாள். மேலும், எத்தகைய இடத்தில் விருந்தானது பரிமாறப்படும் என்பதையும் தோழி பின்வருமாறு குறிப்பிடுகிறாள்.

"இடு முன் வேலி முடக் கால் பந்தர்

புதுக் கலத்து அன்ன செவ் வாய்ச் சிற்றில்" (Somasundaranar, 2007)

விழவுக்கான தயார் நிலையையே இவ்வரிகள் காட்டுகின்றன. இத்தகைய வரிகளை ஆராயும்போது சங்ககாலத்தில் திருமணச் சடங்குமுறைகள் இருந்துள்ளன என்பது தெரிகிறது. இரவுக்குறியில் தலைவன் தலைவியை சந்திக்கும்போது பல்வேறு இடர்ப்பாடுகளை தலைவி சந்திக்க நேரிடும். அதனை தவிர்க்க வேண்டுமாயின் விரைவில் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என தோழி வற்புறுத்துவதாகப் பல பாடல்கள் உள்ளன. பெரும்பான்மை தலைவியின் துயரை எடுத்துக்கூறுவதாக இருக்க, இப்பாடல் திருமணம் நடைபெறுமாயின் தங்களது இல்வாழ்க்கை இன்பகரமாய் அமையும் எனத் தலைவனது ஆசையைத் தூண்டுவதாய் அமைக்கப்பட்டுள்ளது. முல்லைத்திணைப் பாடலாக இருப்பதால் ஆற்றியிருத்தல் எனும் ஒழுக்கத்தைக் காட்டிலும், பொதுவுடைமைச் சமூகத்தின் நிலைப்பாட்டை விளக்குவதாய் இப்பாடல் அமைகிறது.

இப்பண்பாட்டினை இன்றைய சூழலோடு பொருத்திப் பார்த்தால், இன்றும் சில மக்களிடம் இப்பழக்கவழக்கம் இருந்துவருகிறது என்பதைக் காணமுடிகிறது. மணப்பந்தல் அலங்கரித்தல் என்பது பலதரப்பட்ட மக்களின் வழக்கத்தில் இன்றும் காணமுடிகிறது. வண்ணம் பூசப்பட்ட சிவந்த செம்மண் பானைகளை மணப்பந்தர்க்கு முன் அடுக்கி வைக்கப்படும் வழக்கமும் இருந்துவருகிறது. அதேபோல், மணமகள் அல்லது புதுப்பெண் கணவன் உள்ளிட்ட தம் உறவினர்கள் விருந்து சமைக்கும் வழக்கமும் இருக்கத்தான் செய்கிறது. குறிப்பிட்டு சொல்லப்போனால், கம்மாளர் இனத்தைச் சேர்ந்த மக்களிடம் திருமணத்தின்போது பொங்கல் வைத்து கருவாட்டு குழம்போடு பெண்ணானவள் அன்றிரவே விருந்து படைக்கவேண்டும் எனும் வழக்கம் இருந்துள்ளது. பெரும்பாலும் இன்று யாரும் அதனை கட்டாயப்படுத்துவதில்லை. இருப்பினும், இதுபோன்று சில வழக்கங்களை மக்களிடையே இன்றும் காணமுடிகிறது என்பது திண்ணம்.

ஆக, திருமணமின்றி காமப்புணர்ச்சியால் ஒன்றுபட்டு தலைவனும் தலைவியும் வாழும் கந்தருவமணமே தமிழர்களுக்கு உரியது என்ற வாசகம் முழுக்கப் பொருத்தப்பாடுடையதா? என்ற கேள்வி எழுகிறது. சிலம்புகழி கழித்தல் என்பது மட்டுமே சங்ககால மக்களால் பின்பற்றப்பட்டு வந்தது என்றாலும் மானிடவியல் நோக்கில் அணுகினால் அதுவும் திருமணத்தின் பாற்படும் சடங்குதானே. ஆக, வதுவைச் சடங்குகள் சங்ககாலத்தில் இருந்தன என்பது வெள்ளிடைமலை.

## உழுந்து தலைப்பெய்த கொழுங் களிமிதவை

அகநானூற்றின் 86 வது பாடல், தலைவன் தலைவியாகிய இருவருக்கும் திருமண ஏற்பாடு நிகழ்கிறது என்பதனைத் தெளிவுபடுத்துவதாக அமைகிறது.

"உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை

பெருஞ் சோற்று அமலை நிற்ப, நிரை கால்

தண் பெரும் பந்தர்த் தரு மணல் ஞெமிரி

மனை விளக்குறுத்து, மாலை தொடரி" (Somasundaranar, 2007)

உளுத்தம் பருப்புடன் கூடிய களியினை செய்து, பெரிய பந்தரின்கீழ் மணலைப் பரப்பி, மனைக்கண் விளக்கினை ஏற்றி வைத்து, மாலைகளைத் தோரணங்களாகத் தொங்கவிட்டு, உரோகிணி எனும் நல்நாளிலே திருமணமானது நடக்கவிருக்கிறது.

"முன்னவும் பின்னவும் முறை முறை தரத்தர,

புதல்வற் பயந்த திதலை அவ் வயிற்று

வால் இழை மகளிர் நால்வர் கூடி,

"கற்பினின் வழாஅ, நற் பல உதவிப்

பெற்றோற் பெட்கும் பிணையை ஆக!" என" (Somasundaranar, 2007)

விடியற்காலையில், திருமணத்தை நடத்தி வைக்கும் ஆர்வத்தோடு மங்கல மகளிர் பலர் தங்கள் தலையிலும் கைகளிலும் கலங்களை ஏந்திவர திருமணமானது நடந்து முடிகிறது. பின்னர், புதல்வர்களை ஈன்றெடுத்த பெண்டிர்கூடி, புணர்ச்சிக்குரிய இரவில் ஓர் அறைக்கண் இனி பெரியனைக் கிழத்தி ஆவாய் என்று வாழ்த்துகின்றனர். அப்போது,

"யாழ நின்

நெஞ்சம் படர்ந்தது எஞ்சாது உரை" என,

இன் நகை இருக்கை, பின் யான் வினவலின்,

ஒய்யென இறைஞ்சியோளே மாவின்

மடம் கொள் மதைஇய நோக்கின்,

ஒடுங்கு ஈர்ஓதி, மாஅயோளே" (Somasundaranar, 2007)

தலைவியிடத்து தலைவன், நின் உள்ளம் நினைத்ததனை மறையாது உரை என்று வினவுகிறான். இதுவே இவர்களுக்கு முன்னர் அறிமுகமில்லை என்பது தெரிகிறது. கற்பு மணமாகியத் திருமணத்தையே இப்பாடல் வெளிப்படுத்துகிறது. மானின் மடத்தினைக் கொண்டதும் செருக்கினையுடையதுமான நோக்கினையும் குளிர்ந்த கூந்தலினையும், மாமை நிறத்தினையும் உடையவளாகியத் தலைவி நல்லறமாகிய இல்லறத்தில் இணைந்தாள் என்பது இப்பாடல்வழி பெறப்பட்ட உண்மை.

"கொடுப்போர் இன்றியுங் கரண முண்டே

புணர்ந்துடன் போகிற காலை யான" (Ilampooranar, 2010)

கற்பியல் குறிப்பிடும் கரணம் பற்றிய புரிதலில் இந்நூற்பா குறித்தும் அறியவேண்டியுளது. தலைவனும் தலைவியும் உடன்போக்கு மேற்கொள்கையில் பெண்ணின் பெற்றோர் கொடுப்பக் கொள்வதாகிய வதுவைச் சடங்குகள் இல்லை என்பது தெரிகிறது. ஆக, மீண்டும் களவு மணம், கற்புமணம் ஆகிய இருவகை மணமுறைகள் சங்க காலத்தில் இருந்துள்ளது உறுதியாகிறது. களவுவாழ்க்கையில் இணைந்த தலைவன் தலைவி ஆகிய இருவரும் கற்புவாழ்க்கையை அடையவேண்டும் என்பதே நியதி. அதுவே காதலின் வெற்றியும் கூட. இருக்க களவு மணம், கற்புமணம் என்பதில் சில வேறுபாடுகள் உள. மணமாகிய திருமணம் வதுவைச் சடங்குகளுக்குள் உள்ளடக்கம். எனவே, களவு வாழ்க்கைக்கும் கற்பு வாழ்க்கைக்கும்; களவு மணத்துத்துக்கும் கற்பு மணத்துக்கும் வேறுபாடு உண்டு என்பதனை இப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

## உவர்நீங்கு கற்பின் எம் உயிருடம்பு அடுவி

மருத நிலத்துத் தலைவி ஒருத்தி தலைவனோடு ஊடல் கொள்கிறாள். அப்போது, ஊடலைத் தணிவிக்கும் முயற்சியில் ஈடுபட்டத் தலைவன், இருவருக்கும் நடந்தேறியத் திருமண நிகழ்வுகள் குறித்து எடுத்துரைப்பதோடு நில்லாமல், இருவருக்குமான உறவு குறித்தும் பேசுகிறான். இருப்பினும்,

ஊடல் தணியாத நிலையில் தலைவியை நோக்கி, எனக்கும் உனக்குமான உறவுதான் என்னை? என வினவுதாயான ஊடற்பாடல் சங்க காலத்திருமணக் காட்சிகளை மீண்டும் நம் கண்முன் நிறுத்துகிறது. அஃதாவது,

"சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்துக்

கடிநகர் புனைந்து கடவுட் பேணிப்

படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ

வதுவை மண்ணிய மகளிர்" (Somasundaranar, 2007)

இறைச்சியுடன் கூட்டி உண்டாக்கிய நெய்மிக்க வெண்சோற்றினை விருந்தினருக்கு அளித்து, திங்களை உரோகிணி கூடும் குற்றமற்ற நன்னாளில், மனையை அழகுறுத்தி, கடவுளை வழிபட்டு, பெரிய முரசம் ஒலிக்கத், திருமணமானப் பெண்கள் கூடி மணமகளான தலைவியை நீராட்டுகின்றனர். மேலும்,

"தண்நறு முகையொடு வெண்நூல் சூட்டித்

தூவுடைப் பொலிந்து மேவரத் துவன்றி

மழைபட் டன்ன மணன்மலி பந்தர்

இழையணி சிறப்பின் பெயர்வியர்ப்பு ஆற்றித்

தமர்நமக் கீத்த தலைநாள் இரவின்

உவர்நீங்கு கற்பின் எம் உயிருடம்பு அடுவி" (Somasundaranar, 2007)

இவ்வரிகளால் குளிர்ச்சிப் பொருந்திய மலரது அரும்போடு சேர்த்துக் கட்டிய வெள்ளிய நூலினை அணிவித்துள்ளனர் என்ற செய்தியும் தெரியவருகிறது. தூய புத்தாடை அணிந்து ஒலிமிக்க மணப்பந்தலிலே மிக்க சிறப்பினையுடைத்தாகிய அணிகலன்களையும் பூண்டத் தலைவியானவள், சுற்றத்தார்கூடி செய்வித்த மணநாளன்று இரவில் வெறுப்பு நீங்கிய கற்பினையுடையவளாய், என் உயிருக்கு உடம்பாக அடுத்தவள் இன்று என்னோடு ஊடல் கொண்டதன் காரணம்தான் என்ன? இவள் நமக்கு எத்தகைய உறவினள் என்று தலைவன் தன் நெஞ்சிற்கு உரைப்பதாய் இப்பாடல் அமைந்திற்று.

முன்னர் கூறிய இரண்டு பாடல்களிலிருந்து மேலும் சில செய்திகளைத் தருவதாய் இப்பாடல் அமைகிறது. இறைச்சியோடு கூடிய உணவுகள் பரிமாறப்பட்டுள்ளன. மேலும் தலைவிக்கு வெண்நூல் சூட்டும் பழக்கம் இருந்ததும் தெரிகிறது. அதனைத் தாலி அல்லது அரும்புகள் சேர்த்து கட்டப்பட்டிருப்பதால் மாலை எனவும் எடுத்துக்கொள்ளலாம். இன்றைய படுகர் இன மக்களின் திருமண நிகழ்வில் இதுபோன்று நீண்ட மஞ்சள் நூலினை தலைவிக்கு அணிவிக்கிறார்கள். பின்னரே தாலி என்பது கட்டப்படுகிறது. இவையெல்லாம் சங்ககாலத்தில் வதுவைச் சடங்கு முறைகள் இருந்ததை தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

## முடிவுரை

அகநானூற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட இம்மூன்று பாடல்கள் சங்ககால மணவிழவானது எப்படி நிகழ்ந்திருக்கக்கூடும் என்ற வினாவிற்கு விடையளித்தன. எனினும் களவியல் (89) குறிப்பிடும் எண்வகைத் திருமணம் குறித்தும் சிந்திக்க வேண்டியுளது. இச்சூத்திரம் காமப்புணர்ச்சிக்கு இலக்கணம் வகுக்கிறது. சடங்குமுறைகளைத் தாண்டிய பண்பாட்டு முறையையே இச்சூத்திரம் பேசுகிறது. இருப்பினும் இலக்கியப் பதிவுகள் தரும் உண்மையும் ஆராய்ச்சிக்குரியனவே. இலக்கியங்கள் தரும் சான்றாதாரங்களின்வழி ஆராய்ந்தால், தாலி என்கிற அணிகலனால் மட்டுமே மங்கல மகளிர் அடையாளப்படுத்தப்படவில்லை என்பது தவிர, வதுவைச் சடங்குகள் இன்று நிகழ்ந்தேறும் எத்தனையோ இனமக்களோடு பொருந்துவதாகத்தான் உள்ளது. குறிப்பிட்டு சொன்னால், அகநானூற்றுப் பாடல்களைப் பார்க்கும்போது மக்கள், மற்ற இலக்கியங்களான கலித்தொகை, குறுந்தொகை, ஐங்குறுநூற்று மாந்தர்களிலிருந்து சற்று வளர்ந்த நிலவுடைமை சமூகத்தின் எச்சங்களாய் இருப்பதாய்த் தோன்றுகிறது. உதாரணத்திற்கு ஆயக்குடி பிறந்த முல்லைநில மக்களது வாழ்வியல் என்பது காட்டப்படவில்லை. மாறாக, இந்நிலம்சார் வாழும் தலைவன் தலைவியரது சிற்றூரில் வாழும் இனமக்களாகவே அவர்கள் காட்டப்படுகின்றனர். குதிரையில் வரும் படைவீரனாகவே தலைவன் காட்டப்படுகிறான். அவர்களுடைய சமூகநிலை உயர்ந்து காணப்படுவது வெள்ளிடைமலை. ஆகவே, சங்ககாலத்தில் சிலம்புகழி கழித்தல் கடந்து வதுவை நிகழ்ச்சிகள் என்பது இருந்துள்ளன என்பது வெள்ளிடைமலை.

## References


Ilampooranar, (2010) Tholkapiyam, Saratha Pathipagam, Chennai, India.

Somasundaranar, P.V. (2007) Agananooru, Kalaga Veliyeedu, Chennai, India.

Somasundaranar, P.V. (2009) Iyngurunooru, Kalaga Veliyeedu, Chennai, India.


## Funding

This study was not funded by any grant

## Conflict of interest

The Author have no conflict of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

## Cite this Article

M. Bhuvaneswari, Sangam Era Marriage in Anthropological Perspective, Indian Journal of Tamil, 4(4) (2023) 1-7. https://doi.org/10.54392/ijot2341